**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009**

# ஸ்ரீநிவாஸனும் ஸ்ரீநிவாஸரும்

ஒப்பியப்பன் ஸந்நிதி

ஸ்ரீ. உ.வே.வ.ந. கோபால தேசிகாசாரியர் M.A., M.Sc., (London), I.R.T.S. (Retd.)

திருவிண்ணகரப்பனான ஸ்ரீநிவாஸனுக்கு ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்து வந்தவர் நடார் ஸ்ரீநிவாஸ பட்டாசாரியார் ஸ்வாமிகள். அந்த மஹானுக்கு நூறாண்டு நிறைவு விழா (சதமான மஹோத்ஸவம்) திருவிண்ணகரப்பன் திருவடிவாரத்தில் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது.

திருமகள் நாயகன் ஆன எம்பெருமான் பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்ற ஐந்து நிலைகளில் விளங்குகிறான். இவற்றில், நம் போன்றவர்கள் எளிதில் சேவித்து, உஜ்ஜீவிக்கக்கூடிய நிலை திருக்கோயில்களில் ஸேவை ஸாதிக்கும் அர்ச்சா மூர்த்தி ஆகிற நிலைதான்.

அந்த அர்ச்சாமூர்த்தியைப் பூஜிக்கும் பெரும் பேறு பெற்றவர்கள் நம் அர்ச்சகப் பெருமக்கள். அதிலும் வைகாநஸ அர்ச்சக ஸ்வாமிகளின் பெருமை சொல்லத்தரமன்று. ஆம், கர்ப்ப ஸ்ரீமான்கள் அவர்கள். அதாவது, கர்ப்பத்திலேயே எம்பெருமானால் திருவிலச்சினை (ஸமாச்ரயணம்) செய்யப் பெறும் மஹாபாக்யசாகள். அதனால், தங்கள் குடிப்பிறப்பாலேயே பகவானுக்கு ஆராதனம் செய்யத் தகுதி பெற்றவர்கள்.

மேலும், “வேதோऽகில மூல ப்ரமாண:” என்றபடி, எல்லாவற்றுக்கும் மூலப்ரமாணம் வேதமே, வைகாநஸ சாஸ்த்ரம் அந்த வேத மந்த்ரங்களையே அடிப்படையாகக் கொண்டது. எம்பெருமானுடைய திருவாராதனமும் வேத மந்த்ரங்களைக் கொண்டுதான் செய்யப்படுகிறது.

இப்படிப்பட்ட உத்தமமான வைகாநஸ குலத்தில் தோன்றியவர் நம் ஸ்வாமி. பால்யத்திலேயே வைகாநஸ ஆகமங்கள், கல்பஸூத்ரங்கள் முதயவற்றை முறைப்படி நன்கு கற்றுத் தேர்ந்தார். அத்யயநம், அத்யாபநம் இரண்டையும் அந்தணன் செய்ய வேண்டிய கடமைகளாக சாஸ்த்ரம் கூறுகின்றது. அதன்படியே நடார் ஸ்வாமி, தான் வைகாநஸ ஆகமத்தைக் கற்றுத் தேர்ந்து, பலபல சீடர்களுக்கும் அந்த சாஸ்த்ரத்தைக் கற்பித்து, அவர்களுக்குத் திருக்கோயில்களில் ஆராதனம் செய்யும் பாக்யத்தைத் தந்தருளினார்.

“தொண்டே செய்து என்றும் தொழுது வழி ஒழுகப் பண்டே பரமன் பணித்த பணி வகையே” என்று நம்மாழ்வார் அருளிச் செய்தபடி, ஒப்பியப்பனுக்குக் கைங்கர்யம் செய்வதையே, தன் வாழ்வின் லட்சியமாகக் கருதிச் செயல்பட்டு வந்தார் ஸ்வாமிகள்.

“ஆண்டாய் உன்னைக் காண்பதோர் அருள் எனக்கு அருளுதியேல் வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே” – திருவிண்ணகரப்பனே, உன்னைச் சேவிக்கும் பாக்யம் எனக்குக் கிடைத்தால், நான் இல்லற வாழ்க்கையை விரும்ப மாட்டேன் – என்றார் திருமங்கை ஆழ்வார். ஆழ்வார் அருளிச்செய்தபடியே, நம் நடார் ஸ்வாமியும் திருவிண்ணகரப்பனுக்குக் கைங்கர்யம் செய்வதிலேயே தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, இல்லறத்திலேயே ஒரு துறவி போல வாழ்ந்து வந்தார்.

திருவிண்ணகர் என்று போற்றப்படும் ஒப்பியப்பன் கோயில் மிகச் சிறந்த பிரார்த்தனை ஸ்தலமாக விளங்குகிறது. இங்கு ஸேவை சாதிக்கும் பெருமான்

**The Souvenir Published at the time of Nadar Swami Centinery Celebrarion**
**Edited by Sangendhi Dr. S.Muthu Batter & Dr. S.Sudarshan Bhatter -2009**

மிகச்சிறந்த வரப்ரசாதி என்று போற்றப்படுகிறான். "தன்னொப்பாரில்லப்பன்" (தனக்குச் சமமான தெய்வம் வேறு ஒருவரும் இல்லாதவன்) என்று நம்மாழ்வார் இப்பெருமானைப் போற்றுகிறார். நாள்தோறும் எண்ணற்ற பக்தர்கள் வந்து பெருமானைச் சேவித்து, பிரார்த்தனை திருமஞ்சனம், திருக்கல்யாண உத்ஸவம் போன்ற பல உத்ஸவங்களை நடத்துகின்றனர்.

இந்தப் பெருமான் இவ்வளவு சிறந்த, உயர்ந்த ஸாந்நித்யத்துடன் திகழ்வதற்கு என்ன காரணம்? புராணச்லோகம் ஒன்று இதற்கான விடையைக் கூறுகிறது - எம்பெருமான் ஸாந்நித்யத்துடன் சிறந்து விளங்குவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன -

1. அர்ச்சகருடைய தவ வமை

2. அர்ச்சகர் செய்யும் விசேஷமான பூஜைகள், திருவாராதனம் முதயவை.

3. அர்ச்சா மூர்த்தியின் வடிவழகு (ஸௌந்தர்யம்)

இதோ அந்த ச்லோகம் -

அர்ச்சகஸ்ய தபோ யோகாத் பூஜாயாம் ச விசேஷத:/
ஆபிரூப்யாத் ச பிம்பஸ்ய நித்யம் ஸந்நிஹிதோ ஹரி://

இதிலும், அர்ச்சகருடைய பெருமையைத் தான் முதல் இரண்டு காரணங்கள் கூறுகின்றன. எம்பெருமானின் வடிவழகு கடைசியில்தான் வருகிறது. அதனால், ஒரு திருக்கோயின் ப்ரஸித்திக்கும், அந்த எம்பெருமானின் ப்ரஸித்திக்கும், திருக்கோயின் அர்ச்சகர்கள்தான் முக்கியமான காரணம் என்பது தெளிவாக விளங்குகிறது.

ஒப்பியப்பன் திருக்கோயில் பல பல வருஷங்களாக, நம் நடார் ஸ்வாமிகள், அவருடைய திருத்தம்பியார் ஆன யஜ்வா வரத பட்டாசாரியார் ஸ்வாமிகள் முதலானோர் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்து கொண்டும், விசேஷமாக உத்ஸவங்களை நடத்தியும் வந்தனர். மேலே குறிப்பிட்ட ச்லோகத்தின் படி, நடார் ஸ்வாமி போன்ற மஹான்கள் தான் பெருமானுடைய ஸாந்நித்யத்துக்கு முக்கிய காரணம் ஆவார்கள்.

நம் ஸ்வாமியும், அவர் திருத்தம்பியார் வரதபட்டாசாரியார் ஸ்வாமியும் ஒப்பியப்பன் கோயில் ராமலக்ஷ்மணர்கள் போல விளங்கி வந்தார்கள். இருவருமே திருக்கோயிலும், வைகாநஸ ஸம்ப்ரதாயத்துக்கும் பெருந்தொண்டு ஆற்றியவர்கள். வைகாநஸ ஆகமம் பற்றியும், ப்ரயோகங்கள் பற்றியும் நூல்களை எழுதி மக்களுக்குப் பேருபகாரம் செய்துள்ளார்கள். திருத்தம்பியார் உத்தமமான யாகம் செய்து பெரும் புகழ் பெற்ற பேரருளாளர்.

இப்படி, ஒப்பியப்பன் ஆன ஸ்ரீநிவாஸனையும், நடார் ஸ்வாமியான ஸ்ரீநிவாஸரையும் சேர்த்து அனுபவித்தோம், இந்த சதமான உத்ஸவத்தின் அங்கமாக வெளியிடப்படும் மலரில் ஒரு வ்யாஸம் எழுதும்படி அடியேனை நியமித்த பெரியோர்களுக்கு நன்றி கூறி நிறைவுசெய்கிறேன்.

* * * * *